ISSN:2582-9599



# காலத்தை வென்ற காவியத்தில் - பூங்குழலி

5

ப.ராகவி
உதவிப்பேராசிரியர் (தமிழ்த்துறை)
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர் – 613006
ragashwapandi5@gmail.com

**முன்னுரை:**

பூங்குழலி என்னும் கதாபாத்திரம் கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் புதினத்தில் சேந்தன் அமுதன் காதலியாக வரும் கதாபாத்திரத்தின் பெயர். பூங்குழலி என்றால் பூவைப் போன்ற குழல் (கூந்தல்) உடையவள் என்று பொருள். இந்த நூல் தமிழில் வரலாற்று புதினங்களுக்கு ஒரு முன்னோடியாகவே அமைந்தது. பொன்னியின் செல்வனுக்கு இணையாக இன்று வரை ஒரு பதினமும் சிறப்பாக வரவில்லை என்ற பரவலான அபிப்பிராயம் உள்ளது. அத்தகைய சிறப்பான நாவலில் வரும் பூங்குழலி என்ற பெண்ணைப் பற்றி இவ்வாய்வு ஆராய்கிறது.

**அமரர் கல்கி:**

கல்கி அவர்கள் புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார். இரா.கிருஷ்ணமூர்த்தி என்ற இயற்பெயர் கொண்ட இவர்35 சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். எனினும், மிகச்சிறந்த சமூக மற்றும் வரலாற்றுப் புதினங்களை எழுதியதற்காக பரவலாக அறிப்படுகிறார். இவர் எழுதிய பொன்னியின் செல்வன் புதினம் மிகப்புகழ் பெற்றதாகும். தன் படைப்புகள் மூலம் இந்திய தேசிய வீடுதலை போராட்டத்திற்கும் பங்களித்திருக்கிறார். தியாக பூமி, புதினம் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது.

கல்கி 1899-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் தேதி பழைய சென்னை மாகாணத்தில் ஒன்றிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை அருகே அமைந்த பட்டமங்களம் எனும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பப்பள்ளிப் படிப்பைத் தனது கிராமத்தில் முடித்த பிறகு அவர் திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921-இல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கிய போது, அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு கல்கி தனது பள்ளிப்படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரசு கட்சியில் சேர்ந்தார்.

1922-இல் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். 1923-ல் அவர் நவசக்தி என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய முதல் புத்தகம் ஏட்டிக்குப் போட்டி 1927-ல் வெளியானது. 'கல்கி'யின் படைப்புகள் நாட்டுடைமை அகிவிட்டமையால் அவருடைய பல படைப்புகள் இணையத்தில் பல தளங்களில் கிடைக்கின்றன. சுமசுகிருதமும் தியாகராஜரின் தெலுங்கு கீர்த்தனைகளும் பிரபலமாக இருந்து வந்த அக்காலகட்டத்தில் தமிழசைக்காகக் கல்கி சதாசிவம் மற்றும் எம்.எஸ்.சுப்புலட்சுமியுடன் இணைந்து பாடுபட்டார் கல்கி. தமிழ் இசை குறித்த கல்கியின் சிந்தனைகளைத் 'தரம் குறையுமா' எனும் புத்தக வடிவில் வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

**கதாபாத்திரத்தின் இயல்பு:**

காண்போர் மயங்கும் அழகிய பெண்ணாகவும், பெரும் புயலிலும் தனித்து ஆழ்கடலில் படகோட்டியப் பயணிக்கும் திறனுடையவளாகவும், தேவாரப் பாடல்களையும், சுயமாக பாடல் புனைந்தும் பாடும் வல்லமையுடைவளாகவும் பூங்குழலியின் கதைப்பாத்திரத்தினைக கல்கி அமைத்துள்ளார்.

**யார் இந்த பூங்குழலி:**

கோடியக்கரை கலங்கரை விளக்கக் காவலரான தியாகவிடங்க கரையரின் அன்பு மகள் பூங்குழலி. படகோட்டி முருகய்யனின் தங்கையும் ஆவாள். சிறுவயது முதலே கடலோடு வளர்ந்த பூங்குழலி, காற்றைப்போல மென்மையும் கடலைப் போல வலிமையும் நிறைந்தவள். கொள்ளிவாய் பிசாசுகளைத் தனது காதலர்களாக உருவகித்து வாழ்பவள். மனிதர்களின் குணம் அடிக்கடி மாறும் என்பதால், மனிதர்களே இல்லாத பிரதேசத்தில் வாழ வேண்டும் என்று கனவு காண்பவள். வீரமிக்க பூங்குழலி பாடல் பாடுவதில் கைதேர்ந்தவள். 'அலைகடலும் ஓய்ந்திருக்க" என்று பூங்குழலி பாடும் பாடல் பொன்னியின் செல்வன் நாவல் ரசிகர்களின் ஆதர்ஸமான பாடல்.

வந்தியத்தேவன் மனதுக்கு நெருக்கமான தோழி. இலங்கையில் இருக்கும் அருள்மொழி வர்மருக்கு வந்தியத்தேவன் காப்பாற்றுவது பூங்குழலி தான். அதேபோல், அருள்மொழி வர்மரும் வந்தியத்தேவனும் கடலி;ல் தத்தளிக்கையில் அவார்களைக் காப்பாற்றி சோழ அரசுக்கு மாபெரும் சேவை செய்பவள். அதே போல் கடும் சுரக்காய்ச்சலால் அருள்மொழிவர்மர் அவதிப்படுகையில் அவரை நாகை சூடாமணி விஹாரத்துக்காகக் கொண்டு சேர்த்து சிகிச்சைக்கு உதவுவாள். ஊமை ராணி மந்தாகினி தேவியின் பிரியத்துக்குரிய மருமகள், இவரது தந்தையான தியாகவிடங்கர், மந்தாகினியின் சகோதரர் காற்றைப்போல் யார் கைகளிலும் சிக்காமல் சுதந்திரமாக சுற்றித்திரியும் பூங்குழலி, மிகுந்த மனதைரியம் உடையவள். தன்னைத் தாக்க வந்த சிறுத்தையும் மீனின் வால் கொண்டு தாக்கிக் கொல்லும் வீரம் செறிந்த பெண், பொன்னியின் செல்வன் நாவலில் வரும் குந்தவை, நந்தினி, வானதி, மணிமேகலை உள்ளிட்ட மற்நெற்த பெண் கதாபாத்திரங்களில் இருந்தும் பூங்குழலி வேறுப்பட்டவள். ஓடக்காரப் பெண்ணான பூங்குழலி அழகும் வீரமும் ஒருங்கே அமையப்பெற்றவள். மனிதர்களைக் கண்டாலே கோபம் கொள்ளும் கோபக்கார். பல இடங்களில் பூங்குழலி கொடுக்கும் தகவல் முக்கியமான முடிவுகளை எடுக்க உதவும்.

**வந்தியத்தேவனுடன் சந்திப்பு:**

பூங்குழலி கோடிக்கரை குழகர் கோவிலினுள் தரிசனத்திற்காகச் செல்கிறாள். இரவு நேரம் நெருங்குவதால் பட்டரும் நடையைச் சாத்திவிட்டு அவளுடன் வருவதாகக் கூறுகிறார். பட்டருக்காகக் கோவிலின் வெளியே காத்திருக்கும் போது குதிரையில் வைத்தியர் மகனும், வந்தியத்தேவனும் வருகிறார்கள். வந்தியத் தேவனை உள்று நோக்கும் பூங்குழலியை அவனும் பார்த்துக் கொண்டே குதிரையில் அருகே வருகிறான். தேங்காய் கீற்றினைக் கடித்தபடியே ஒரு ஆடவனைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து வெட்கம் கொண்டு ஓடுகிறாள் பூங்கொடிவந்தியத்தேவன் ஓடிச்சென்று அவளைப் பிடிக்க முயலுகிறான். ஆனால் எதிர்பாராவிதமாய் புதைமணலில் சிக்கிக்

கொள்கிறான். பிறகு பூங்குழலி அவனை காப்பாற்றுகிறாள். இருவரும் இணைந்து தியாகிவிடங்கர் வீட்டிற்கு செல்கின்;றார்கள்.

சேழ இளவரசி குந்தவை இலங்கையில் பெரும் படையுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் தன் தம்பி அருள்மொழி வர்மனுக்குக் கொடுத்தனுப்பிய ஓலையை வாங்கிக்கொண்டு வந்தியத்தேவன் கோடியக்கரையை வந்து அடைகிறான். அங்கே அழகான பூங்குழலியை சந்திக்கிறான். பூங்குழலி படகு ஓட்டுவதில் திறமைசாலி. அவளின் படகில் இருவரும் இலங்கைக்குப் பேசுகிறார்கள்.

பூங்குழலியின் அத்தை ஒரு வாய்ப்பேச இயலாத பெண். அவளது மகன் சேந்தன் அமுதன் என்பவன். பூங்குழலி மேல் காதல் கொண்டவன். இவன் வந்தியதேவனுக்கு பெரிதும் உதவியவன். படகுக்காரியான பூங்குழலி இளவரசர் அருள்மொழிவர்மனிடம் காதல் கொள்கிறாள். அதே சமயம் இளவரசரும் பூங்குழலியிடம் காதல் கொள்கிறார். ஆனால் இதனை இருவரும் வெளிப்படுத்திக்கொள்ளவில்லை.

**“அலைகடலும் ஓய்ந்திருக்க அகக் கடல்தான் பொங்குவதேன்?**
**நிலமகளும் துயிலுகையில் நெஞ்சகந்தான் பதைப்பதுமேன்?**
**காட்டினில் வாழ் பறவைகளும் கூடுகளைத் தேடினவே!**
**வேட்டுவரும் வில்லியரும் வீடு நோக்கி ஏகுவரே**
**வானகமும் நானிலமும் மோனமதில் ஆழ்ந்திருக்க**
**மான்விழியாள் பெண்ணொருத்தி மனத்தில் புயல் அடிப்பதுமேன்?**
**வாரிதியும் அடங்கி நிற்கும் மாருதமும் தவழ்ந்து வரும்**
**காரிகையாள் உளந்தனிலே காற்றுச் சுழன் றடிப்பதுமேன்?**

என்ற பாடல் வரிகள் பூங்குழலி பாடுவதாய் பொன்னியின் செல்வன் நாவலில் அமைந்துள்ளன.

**பூங்குழலி சமுத்திரகுமாரியாக மாறுதல்:**

சோழ இளவரசன் அருள்மொழிவர்மனிடம் மனதைப் பறிகொடுத்தவர். அவர், தனக்கு சமுத்திரகுமாரி என்று பெயர் வைத்ததாக வந்தியத்தேவனிடம் சொல்பவள். அருள்மொழிவர்மரின் தந்தை சுந்தரச்சோழன், தனது அத்தை மந்தாகினி தேவியைக் கைவிட்டதாக எண்ணும் பூங்குழலி, ஒரு நாள் அரியணை ஏறும் அரசரை மணந்து மகாராணியாக வீற்றிருக்க வேண்டும் என்று சபதம் ஏற்பாள். அருள்மொழிவர்மருடன் யானையில் பயணிக்கும்போது, அந்தக் காதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். ஆனால், சேந்தன் அமுதனின் தூய்மையான அன்பால், தனது சபதத்தை விடுத்து அவரைத் திருமணம் செய்ய முன்வருவாள். காலத்தின் சூழலால் மதுராந்த உத்தமச் சோழராக சேந்தன் அமுதன் சோழ அரியணை ஏற, மகாராணியாக பூங்குழலியின் சபதம் நிறைவேறும்.

**பொன்னியின் செல்வன் - வரலாற்றுப் பின்னணி:**

பொன்னியின் செல்வன் புதினம் கற்பனையோடு கலந்து எழுதப்பட்ட வரலாற்றுப் புதினம், என்றாலும் பொன்னியின் செல்வன் நிகழும் காலகட்டத்தில் வாழ்ந்த நிகழ்கால வலாற்றக் கதாபாத்திரங்களைச் சுற்றி சுழல்வதாக அமைந்தது. அதுமட்டுமல்லாமல், பொன்னியின் செல்வன் கதையில் பல விதமான கதைமாந்தர்கள் இருந்தனர். விசயாலய சோழன் (கி.பி 847 – 871)

பல்லவர்களும் பாண்டியர்களும் பலமாக இருந்த காலத்தில் அவர்களை வென்று விசயாலய சோழன் தோற்றுவித்த சோழர் பேரரசை விரிவாக்கினார். அவருக்குப் பிறகு ஆட்சிக்கு ஆதித்த சோழனின் மகன் முதலாம் பராந்தக சோழன் தோற்றுவித்த சோழர் பேரரசை விரிவாக்கினார்.

அவருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஆதித்த சோழனின் மகன் முதலாம் பராந்தக சோழன் (கி.பி 907 – 955) ஈழத்திலும் பாண்டிய நாட்டிலும் பெற்ற வெற்றிகளே, பிற்காலச் சோழ மன்னர்களின் புகழ்பெற்றவர்கள் இராசராச சோழனுக்கு, இராசேந்திர சோழனுக்கும் சோழ சாம்ராஜ்யத்தை தென்னிந்தியாவின் முதல் பேரரசாக விரிவுபடுத்த பெரிதும் உதவியது.

**திருவாலங்காட்டுச் செப்பேடுகள்:**

விண்ணுலகுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையால் ஆதித்தன் மறைந்தான் (காணாமற் போனான்) கலியின் வல்லமையால் ஏற்பட்ட காரிருளைப் போக்க, அருள்மொழிவர்மனை அரசனாகுமாறு அவனுடைய குடிமக்கள் வேண்டினர். ஆனால் சத்திரிய தருமத்தை நன்கு அறிந்த அருண்மொழி அரசபதவியை விரும்பவில்லை என்று கூறிவிட்டான். தன்னுடைய சிற்றப்பன் அவ்வரச பதவியை விரும்பவதை உணர்ததமையால் தன் சிற்றப்பன் ஆசை தீருமட்டும் அரசனாக இருக்கட்டும் என்று அருண்மொழி அரசபதவியை மறத்துவிட்டான் என்று தெரிவிக்கின்றன. இந்தக் காலகட்டத்தைத்தான் கல்கி தன்னுடைய பொன்னியின் செல்வன் வரலாற்றுப்புதினத்திற்கான கதைக்களமாகத் தேர்ந்தெடுத்தார். பொன்னியின் செல்வன் என்பது இராசராச சோழனுக்கு வழங்கப்பட்ட பட்டப்பெயர்களுள் ஒன்று, அருள்மொழிவர்மருடைய பெயராக கல்வெட்டுக்களில் காணப்படுவது இராசகேசரி வர்மன் அல்லது மும்முடி சோழ தேவன் என்பது. பொன்னியின் செல்வன் வரலாற்றுப் புதினத்தின் கதாநாயகனாக வாணர் குல வீரன் வல்லவரையன் வந்தியத்தேவனைக் கல்கி அவர்கள் தேர்ந்தெடுத்தார். வந்தியத்தேவனைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் தஞ்சைப் பெரியகோயில் கிடைக்கின்றன். இராசராச சோழரின் தமக்கையும் வல்லவரையர் வந்தியத்தேவரின் மனைவியுமான ஆழ்வார் பராந்தகை குந்தவையார் என்று கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. கல்கி மேலும் கே.ஏ.நீலகண்ட சாத்திரியின் சோழர்கள் புத்தகத்தையும், தி.வி.சதாசிவப் பண்டாரத்தின் பிற்காலச் சோழர் சரித்திரத்தையும் மையமாக வைத்து பொன்னியின் செல்வனை எழுதினார். இதில் பிற்காலச் சோழர் சரித்திரத்தில் வந்தியத்தேவனைப் பற்றிய ஐந்து வரிகள் காணப்படுகின்றன. இதனை மையமாக வைத்தே வந்தியத்தேவனை பொன்னியின் செல்வனின் கதாநாயகனாக கல்கி வைத்தார்.

**பூங்குழலியின் துணிச்சல்:**

சோழ நாட்டில்பிரயாணம் செய்தவர்கள் அந்நாட்டின் இயற்கை ஒரு விசித்திரத்தைக் கவனித்திருப்பார்கள். சோழ நாட்டை சோறுடை வளநாடாகச் செய்யும் நதிகளில் வெள்ளம் வரும்போது, வெள்ளத்தின் மேல் மட்டம் நதிக்கு இருபுறங்களிலுமுள்ள பூமி மட்டத்துக்கு மிக் உயரமாயிருக்கும். இவ்விதம் இருப்பதினாலேதான் நதிகளில் வரும் வெள்ளம் வாய்க்கால்களின் வழியாக வயல்களுக்குப் பாய்வது சாத்தியமாகின்றது. இந்த நிலையில் வெள்ளத்தை நதிப் படுகையோடு போகச் செய்வதென்பது மிகவும் சிரமமான காரியம் அல்லவா? நதகளுக்கு இருபக்கங்களிலும் உயரமான கரைகள் உறுதியாக அமைந்திருக்க வேண்டும். இல்லாவிடில், வெள்ளம்

நதியோடு போவதற்குப் பதிலாக, மழை நீர் நாலாபுறமும் பாய்ந்து ஓடுவது போல் ஓடிச் சோழ நாட்டைத் தண்ணீர் தேங்கிய சதுப் நிலமாக்கி ஒன்றுக்கும் பயனற்றதாகச் செய்துவிடும்.

இவ்விதம் இயற்கை, விசேஷ உதவிகள் செய்தது போலவே, சில சமயம் விபரீதமான அபாயங்களையும் உண்டாக்கி வந்தது. பூம்புகார் என்று வழங்கிய காவேரிப்பட்டினத்தைக் கடல் கொண்டது வெறுங்கதையன்று. சரித்திர ஆதாரங்களினால் நிரூபிக்கக் கூடிய உண்மை நிகழ்ச்சியேயாகும். சோர்வு சோம்பல் என்பதையே அறியாத தன்னம்பிக்கை கொண்ட மக்கள் அக்காலத்தில் சோழ நாட்டில் வாழ்ந்திருந்தார்கள். இல்லாவிடில் இன்றைக்கும் உலகம் கண்டு வியக்கும்படியான அற்புதங்களை அவர்கள் சாதித்திருக்க முடியாது அல்லவா? வானதி கோயில் மண்டபத்தின் மீது ஏறாமல் தவறித் தண்ணீரில் விழுந்ததும் முதலில் மண்டபத்தின் மேல் ஏறியிருந்தவர்கள் கவலை அடைந்தார்கள். ஆனால் உடனடியாக அந்தக் கவலை மாறியது. வானதி, ஜோதிடர் வீட்டுக் கூரை மீது தொத்திக் கொண்டதைப் பார்த்து அவர்களுக்குத் தைரியம் உண்டாயிற்று. இளையபிராட்டி ஓரளவு குதூகலமே அடைந்தாள். வானதியை அபாயகரமான நிலைமைகளில் சிக்க வைப்பதிலும், அவள் எப்படிச் சமாளிக்கிறாள் என்று பார்ப்பதிலும் குற்தவை தேவிக்கு எப்போதும் உற்சாகம் இருந்தது. வீராதி வீரனான தம்பியை மணந்து கொள்ளப் போகிறவள் நெஞ்சுத் துணிவுள்ள தீரமங்கையாக வேண்டுமென்பதில் இளைய பிராட்டிக்குச் சிரத்தை இருந்தது.

அத்தகைய தீரத்தை வானதியின் உள்ளத்தில் வளர்க்கும் பொருட்டுக் குந்தவை பல உபாயங்களையும் தந்திரங்களையும் கையாண்டு வந்தாள். அந்த உபாயங்கள் நல்ல பலன் அளித்திருக்கின்றன என்ற நம்பிக்கையும் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. பூங்குழலி சிரிப்புச் சத்தத்துடன் நுழைந்தாள். பூங்குழலி அப்போது குந்தவையைப் பார்த்து, 'தேவி! எனக்கு அனுமதி கொடு;ங்கள்! நான் நீந்திப்போய் படகை வழிமறிந்து அழைத்துச் சென்று கொடும்பாளூர் இளவரசியை ஏற்றி வருகிறேன்! என்றாhள்.

குந்தவை சிறிது தயங்கினாள். பூங்குழலி கையைக் கொடுக்கப்போய்த்தான் வானதி வெள்ளத்தில் விழுந்தாள் என்பது அவளுக்கு நினைவு இருந்தது. பூங்குழலி உடனே 'தேவி ன்னை நம்புங்கள், என்னுடைய அஜாக்கிரதையினால் தான் இளவரசி வெள்ளத்தில் விழுந்தாள். ஆகையால் அவரை மீட்பது என்னுடைய கடமை' என்றாள். பூங்குழலி குந்தவைப் பிராட்டியைப் பார்த்து நான் இருக்கும் படகி;ல் ஒருவேளை ஏற மறுத்து விடுவார் என்கிறீர்களா? அப்படியானால் அவரை ஏற்றிவிட்டு நான் இறங்கிக் கொள்வேன்! என்று சொல்லிக் கொண்டே வெள்ளத்தில் பாய்ந்தாள். படகை நோக்கி விரைந்து சென்றாள். வானதியைக் காப்பாற்ற முயற்சித்தாள்.

**பூங்குழலியின் திகில்:**

அன்றொரு நாள் நாலாபுறமும் இருள் சூழ்ந்து வரும் விசித்திரத்தைப் பூங்குழலி பார்த்துக் கொண்டேயிருக்கையில், குதிரையின் காலடிச் சத்தத்தைக் கேட்டாள். சத்தம் வந்த வழியே ஆவலுடன் பார்த்தாள். குதிரைக் காலடியின் சத்தம் அவளுடைய உள்ளத்தில் ஏதேதோ பழைய ஞாபகங்களை எழப்பி அவளைக் கனவு லோகத்துக்குக் கொண்டு போயிற்று. எங்கிருந்தோ இனந் தெரியாத ஒரு துக்கம் வந்து நெஞ்சை அடைத்தது. வருகிறத யாராயிரக்கக் கூடும்? யாராயிருந்தால் நமக்கு என்ன கவலை? கொஞ்ச காலமாகப் புது ஆட்கள் வருகிறதும் போகிறதும் அதிகமாய்த்தான் இருக்கிறது.

இராஜாங்க காரியமாக வருகிறர்களாம், போகிறார்களாம். நேற்றைக்குக் கூட இரண்டு பேர் வந்திருந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்கே அருவருப்பாயிருந்தது. அண்ணனைப் படகு வலிக்கச் சொல்லி ஈழத்துக்குச் சென்றார்கள். பணமும் நிறையக் கொடுத்தார்கள். பின்புறம் திரும்பிப் பார்த்ததும் ஓர் உருவமும் தென்பட்டது.

வந்தியத்தேவன் திடீரென்றுத் தோன்றி திடீரென்று மறைந்ததும் பூங்குழலி தகிலுற்றாள். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனார் இந்தக் கோடிக் கரைக்கு வந்தார். காட்டின் மத்தியில் தன்னந்தனியே கொயில் கொண்டிருந்த குழக்கரையைத் தரிசித்தார். அதைப் பார்த்த பூங்குழலி ‘அந்தோ! இறைவா! இப்படி இந்தக் கடற்கரைக் காட்டின் மத்தியில் துணையின்றித் தனியே இருக்கிறீரெ? இருக்க வேறு இடமாயில்லை? பக்தர்கள் கூட்டங்கூட்டமாக உமது பகழைப் பாடிக்கொண்டிருக்கும் ஸ்தலங்கள் எத்தனையோ இருக்க. இந்தக் கோடிக்கு வந்து பயங்கரக் காட்டிலே தனியே கோயில் கொண்டிருப்பதேன்? இக்கோடியேனுடைய காண நேர்ந்ததே! என்று மனமுருகிப் பாடினார்.

**‘கதிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்**
**குடிதானயலே இருந்தாற் குற்றமாமோ?**
**கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்**
**அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே?**
**மத்தம் மலிசூழ் மறைக்காடதன் றென்பால்**
**பத்தர் பலர் பாடவிருந்த பரமா!**
**கொத்தார் பொழில் சூழ்தருகோடிக் குழகா**
**எத்தாற் றனியே யிருந்தாய்? எம்பிரானே!**

என்ற பாடலைக் கேட்டதும் நமக்குள்ளே ஏதோ ஓர் உணர்வு ஏற்படுகிறது எனலாம்.

**முடிவுரை:**

ஒரு துணிச்சலான பெண் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு பூங்குழலி சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கதையில் கதாபாத்திரங்கள் அனைத்தும் வெவ்வேறு விதமான சூழலில் அமைவதாகப் படைக்கப்பட்டது கல்கியின் சாகசத்தைக் குறிக்கிறது. ஒன்றொன்றை சார்ந்து அமைவது இதன் சிறப்பாகும். பூங்குழலியின் செயல் கண்கவர் திட்பம் உடையது. ஓர் அரச குடும்பத்துப் பெண்ணுக்கு இணையான மனதிட்பமும், கூர்மை நோக்கும், பார்ப்பவர்களைக் கவரும் கவர்ச்சியும், அன்பும், காதல் வயமும், துணிச்சலும் ஒருங்கேப் பெற்றுக் காணப்படுபவள் இப்பூங்குழலி என்பது இவ்வாய்வு கட்டுரை உணர்த்தும் முடிவாகும்.

**துணைநூற்பட்டியல்:**

- பொன்னியின் செல்வன் - அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி - மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம் - அண்ணா பல்கலைக்கழகம் - 2003
- பொன்னியின் செல்வன் பகுதி 1 - கல்கி கிருஷ்ணமூர்த்தி – பவித்ரா சீனிவாசன் (மொழி பெயர்ப்பாளர்) - வானதி பதிப்பகம் - 1993
- பொன்னியின் செல்வன் ஆடியோ புத்தகங்கள் - மியூசிக் பாக்ஸ் தமிழ் வலையொளிப் பக்கம் – 2020